உலகத் தமிழ் ஆய்வு மன்றம்
International Association of Tamil Research (IATR)

## பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## சிங்கப்பூர், 2023-ஆம் ஆண்டு, சூன் திங்கள் 16 - 18

பெருமதிப்புக்குரிய தமிழ் அறிஞர் பெருமக்களே,

வணக்கம். உலகத் தமிழ் ஆய்வு மன்றம் (IATR) தொடங்கப்பட்ட 1964-ஆம் ஆண்டு முதல் இதுவரை 10 உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன. மன்றத்தின் முதன்மையான நோக்கமான தமிழ் ஆராய்ச்சிக்கு அளிக்கப்படும் இன்றியமையாமையை நிலைநிறுத்தவும் அடுத்துவரும் பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிங்கப்பூரில், 2023-ஆம் ஆண்டு, சூன் திங்கள் 16 முதல் 18 ஆம் நாள் வரை நடைபெற உள்ளது. நடைபெற்ற மாநாடுகளில் பெரும்பாலானவை அரசியல் தொடர்போடும் அரசாங்கத் துணையோடும் நடத்தப்பட்டன. ஆனால், இந்த மாநாடு உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணையோடும் சிங்கப்பூரிலுள்ள "The Millennial Tamils" ஒத்துழைப்போடும் நடைபெற இருக்கின்றது.

உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் முதன்மையான நோக்கம், "பொதுவாகத் திராவிடம் பற்றியும் சிறப்பாகத் தமிழ் பற்றியும் செய்யப்படும் ஆய்வுகள் பல்வேறு துறைகளில் அறிவியல் முறையில் செய்வதற்கான ஊக்குவித்தலும், இவற்றோடு தொடர்புடைய பிற துறைகளில் ஆய்வுகள் செய்து வரும் அறிஞர் பெருமக்களோடும், உலக நிறுவனங்களோடும் நெருங்கிப் பங்கு கொள்ளுதலும் ஆகும்." இம்மன்றத்தின் தலையாய நோக்கமே பதினொன்றாம் உலகத் தமிழ் மாநாட்டின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது:

> **"புதிய வரலாற்றியல் கண்ணோட்டத்தில் தமிழ்ச் செவ்விலக்கியங்களை ஆராய்ந்து, முன்னைய, அண்மைக்கால அகழ்வாய்வுகளோடு, பிற அறிவியல் சான்றுகளை முன் வைத்து, தமிழர், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு நாகரிகம் ஆகியவற்றின் உண்மையான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தல்."**

இத்துடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சித் தலைப்புகள் இம்மாநாட்டின் அடிப்படை நோக்கத்தைப் பல்வேறு கோணங்களில் விரிவுபடுத்திக் காட்டுபவை. ஆராய்ச்சித் தலைப்புகளையும், ஆராய்ச்சிக் கட்டுரைச் சுருக்கத்தையும் (Abstract), ஆராய்ச்சி முழுக்கட்டுரையையும் (Full Research paper), அனுப்ப வேண்டிய முறைகளை, இம்மடல் இணைப்பிலும், பின் வரும் வலைத்தளங்களிலும் (websites www.iatrofficial.org or https://www.icsts11.org or email contact@icsts11.org) கண்டுகொள்க. அறிஞர்கள் சிறந்த ஆராய்ச்சிகளைச் செய்து முடிக்க விழைகின்றோம்

நீங்கள் இந்த ஆய்வுகளைச் சிறப்பாகச் செய்யவும், உங்களை மாநாட்டில் காணவும் விழைகின்றோம். மீண்டும் நன்றி, வணக்கம்.

அன்புடன்

**பேரா. முனைவர் ப.மருதநாயகம்**
தலைவர், ஆய்வுக் குழு
பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

***"புலவர்"*, முனைவர் பிரான்சிசு ச. முத்து**
இணைத்தலைவர், ஆய்வுக் குழு
பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

**முனைவர் எம் .எஸ் . ஸ்ரீலஷ்மி**
உறுப்பினர், ஆய்வுக் குழு
பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு
## சிங்கப்பூர், 2023-ஆம் ஆண்டு, சூன் திங்கள் 16 - 18
## ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தலைப்புகள்

*2023-*ஆம் ஆண்டு, சூன் திங்கள் சிங்கப்பூரில் நடைபெற உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிறப்பு நோக்கங்கள்; தமிழர்கள், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் நாகரிகத்தின் வரலாற்றை மீண்டும் எழுதுவதற்கு ஊக்குவிப்பதும் துவக்குவதும் ஆகும். தமிழில் உள்ள செவ்விலக்கியங்களை மறுமதிப்பீடு செய்வதன் மூலமும், முன்னைய, அண்மைக்கால அகழ்வாய்வுகள் மற்றும் பிற அறிவியல் சான்றுகளின் அடிப்படையிலும் இந்த நோக்கத்தை அடையலாம். அத்துடன் தமிழ் அறிஞர் பெருமக்கள் தற்காலத் தமிழ் உரைநடை, பாடல்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்ய வேண்டும் என இந்த மாநாடு ஊக்குவிக்கின்றது. இந்நோக்கங்கள் சிறப்புற, வெற்றிபெற, கீழ்க்கண்ட தலைப்புகளில் ஆழ்ந்த ஆய்வோடு பிழைகளற்ற, முருகியலின்பம் தரும் நடையில் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், இம்மாநாட்டில் இடம்பெற வரவேற்கப்படுகின்றன.

### மாநாட்டின் மையக்கருத்து

> "புதிய வரலாற்றியல் கண்ணோட்டத்தில் தமிழ்ச் செவ்விலக்கியங்களை ஆராய்ந்து, முன்னைய, அண்மைக்கால அகழ்வாய்வுகளோடு, பிற அறிவியல் சான்றுகளை முன் வைத்து, தமிழர், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு நாகரிகம் ஆகியவற்றின் உண்மையான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தல்."

### ஆராய்ச்சிப் பிரிவுகள்

1. செவ்விலக்கியங்கள் (சங்க இலக்கியங்கள்)
2. பழந்தமிழரின் நாகரிகம்
3. தொல்காப்பியம்
4. திருக்குறள்
5. உலக நாகரிகத்திற்கு இடைக்காலத்தில் (5 - 12 ஆம் நூற்றாண்டு) தமிழின் பங்களிப்புகள்
6. புகழ்பெற்ற அறிஞர்களின் பங்களிப்புகள் பற்றிய ஆய்வு
7. தமிழ் இசையும் கலைகளும்
8. தற்காலத் தமிழ் இலக்கியங்கள்
9. தமிழ் மொழி, மொழியியல், கையெழுத்துப்பிரதி இயல் மற்றும் தமிழ் இலக்கியங்களின் அச்சு வரலாறு
10. பழங்காலத் தமிழ்நாட்டில் இசை, நடனம், ஓவியம், சிற்பம் மற்றும் கட்டிடக்கலை ஆகியவற்றின் செழிப்பான வளர்ச்சி

**பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு**

**சிங்கப்பூர், 2023-ஆம் ஆண்டு, மே திங்கள் 26 - 28**

**ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தலைப்புகள்: விரிவு**

**சங்க இலக்கியங்கள்:**

1. தமிழ்ச் செவ்விலக்கியங்களைப் பிறமொழிச் செவ்விலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்தல்.
2. புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய தமிழ்ச் செவ்விலக்கியங்கள்: தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலங்களாகத் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்.
3. செவ்விலக்கியங்களில் இயற்கை.
4. சங்க காலச் சமுதாயத்தில் சமத்துவம்.
5. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பெண்கள்.
6. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் காட்டும் பண்டைத் தமிழக விளிம்பு நிலைக் குடிமக்கள்.
7. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் காட்டும் பழங்காலக் கல்விநிலை.

**தமிழ் நாகரிகத்தின் பழமையும் அது உலகெலாம் பரவிய வகையும்:**

1. தமிழர் தோற்றத்தையும் அவர் உலகெலாம் பரவிய வகையையும் மரபியல் மூலமும் (genetics) மரபியல் காட்டும் வழிமுறை வகையிலும் (genographics) ஆய்வு செய்தல்.
2. தமிழ்ச் சங்கங்களும் தமிழர் நாகரிகமும் வளர்ந்த குமரி நாடு அல்லது குமரிக் கண்டம் ஒன்று இருந்தமையை, வரலாறு, இலக்கியம், அகழ்வாய்வு (archeology), நிலவியல் (geology) போன்ற அறிவியல் சான்றுகளோடு நிறுவ ஆய்வு செய்தல்.
3. பழந்தமிழ்ப் பண்பாட்டினை கீழேக் காணும் பழம்பெரும் பண்பாடுகளோடு ஒப்பாய்வு செய்தல்: எகிப்தியர் , எபிரேயர் , கிரேக்கர் , ரோமையர், மற்றும் சீனர் பண்பாடு.
4. உலகத்தின் பழம்பெரும் நாகரிக வளர்ச்சியில் தமிழரின் பங்களிப்பு (contribution); கீழே குறிப்பிட்டுள்ள நாகரிகம் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்க : சிந்துவெளி, சுமேரிய, மெசபட்டோமியா, அக்கேடின், எகிப்திய மற்றும் மத்தியதரைக்கடல் நாகரிகம்.
5. பழந்தமிழர் நாகரிகம் குறித்து இராசு அடிகளாரின் (Rev. Fr. Heras S.J.) ஆய்வுமுடிவுகள்.
6. பழந்தமிழர் நாகரிகம் குறித்துப் பேராசிரியர் அசுகோ பர்போலாவின் (Asko Parpola) ஆய்வுமுடிவுகள்.
7. பழந்தமிழ் நாகரிகம் குறித்து புதுச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் இராசனின் ஆய்வுமுடிவுகள்.
8. தென்னிந்தியாவில் ஆதிச்சநல்லூர், பொருந்தல், கீழடி போன்ற இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள்.

**தொல்காப்பியம்**

1. தொல்காப்பியமும் தற்கால மொழியியலும்.
2. தொல்காப்பியர் காலம்.
3. தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள்.
4. ஐந்திணைக்கோட்பாடும் தமிழ் அகஇலக்கிய மரபும்.
5. தொல்காப்பியமும் கீழே காணும் பிறமொழி இலக்கண நூல்களும்: ஒப்பாய்வு. இவற்றுள் ஒன்றினைத் தேர்வு செய்து ஆய்வு செய்க : கிரேக்க, இலத்தீன், எபிரேய, வடமொழி, கன்னட, தெலுங்கு, மலையாள, மற்றும் பிறமொழி இலக்கண நூல்கள் (மொழியைக் குறிப்பிடுக).
6. தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை: தொடர்ந்துவரும் தமிழ் இலக்கண மரபுகள்.

**திருக்குறள்**

1. திருவள்ளுவர், "உலகளாவிய மாந்தனைப் பாடிய புலவன்" ('The Bard of Universal Man' Dr. G U Pope).
2. திருக்குறள் பண்டைத்தமிழர்தம் பண்பாட்டு நாகரிகக் கருவூலம்.
3. திருக்குறளும் வாழும் வழிமுறைகளும் (the art of living).
4. திருக்குறள், தற்கால வாழ்க்கைக்கும் வழிகாட்டும் அறநூல்.
5. திருக்குறளும் பிறமொழிகளில் உள்ள அறநூல்களும்: ஓர் ஒப்பாய்வு.
6. உலகநாடுகளில் திருக்குறளின் செல்வாக்கு.
7. உலக நூலாகத் திருக்குறள்.

**உலக நாகரிகத்திற்கு இடைக்காலத்தில் (5 - 12 ஆம் நூற்றாண்டு) தமிழின் பங்களிப்புகள்**

1. சிலப்பதிகாரத்தின் தனித்துவம்.
2. கம்பனின் ராமாயணம் கிரேக்கம், இலத்தீன், இத்தாலியன் மற்றும் வடமொழியில் உள்ள காப்பியங்களோடு ஒப்பிடல்.
3. இந்தியாவின் நாகரிக, இலக்கிய மரபுகளுக்கு பக்தி இலக்கியத்தின் பங்களிப்பு.

**பேரறிஞர்களைப் பற்றிய ஆய்வு செய்து**

1. கீழ்க்கண்ட அறிஞர் பழங்கால, இடைக்கால, மற்றும் தற்காலத் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் ஆய்வுகளுக்குத் தந்த பெரும் பங்களிப்பு (யாராவது ஒருவர் பங்களிப்பை ஆய்வு செய்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவும்).

| | | |
|---|---|---|
| ஆர். இ. ஆசர் (R E Asher) | திரு. வி. கலியாணசுந்தரனார் | புலவர் நன்னன் |
| சார்சு ஆர்ட் (George Hart) | மறைமலை அடிகளார் | ம.இராசமானிக்கநார் |
| கரெகுகொரீ சமெசு (Gregory James) | மயிலை சீனி வேங்கடசாமி | ஏ. கே. இராமநுசன் (A K Ramanujan) |
| இலக்குவனார் | தெ. பொ. மீனாட்சிசுந்தரம் | தேவநேயப் பாவாணர் |
| கலைஞர் மு. கருணாநிதி | பரிதிமாற் கலைஞர் | தனி நாயக அடிகளார் |
| கமில் சுவெலபில் (Kamil Zvelebil) | திருத்தந்தை ஜி. உ . போப் | விபுலானந்த அடிகளார் |

**தமிழ் இசையும் கலைகளும்**

1. தமிழ் இசை, கலைகள்: இவற்றின் பழமை.
2. கருநாடக இசையில் தமிழ் இசையின் தாக்கம்.
3. பழங்காலத்தில் வழங்கிய தமிழ் இசைக் கருவிகள்.
4. தற்காலத் திரைப்படப் பாடல்களில் சங்க இலக்கியப் பாடல்களின் தாக்கம்.

**தற்காலத் தமிழ் இலக்கியங்கள்**

1. தமிழ் உரைநடை, செய்யுட்கள் (பாடல்கள்): இவற்றின் தற்காலப் போக்கு.
2. கணினி தொழில்நுட்பம் மற்றும் தமிழ் ஆய்வுகளில் அதன் இயலக்கூடிய பங்களிப்புகள்.
3. சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பிற நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களுக்குத் தமிழ் கற்றல், கற்பித்தல்.
4. புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ் இலக்கியப் படைப்புகள்: சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பிற நாடுகளில் படைப்பிலக்கியங்களும் திறனாய்வு நூல்களும்.

**தமிழ்மொழியும் மொழியியலும் கையெழுத்து இயல் மற்றும் தமிழ் இலக்கியங்களில் அச்சு வரலாறு**

1. தொல்காப்பியம்: அதில் பொதிந்துள்ள மொழியியல் நுணுக்கங்களும் இலக்கியக் கோட்பாடுகளும்.
2. அகராதி இயலில் தமிழ் நிகண்டுகளின் பங்களிப்பு.
3. பெச்சியின் சதுரகராதி (Beschi's Caturakaraati)

**பழங்காலத் தமிழ்நாட்டில் இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாட்டுப்புறவியல் மற்றும் கட்டிடக்கலை ஆகியவற்றின் செம்மையான வளர்ச்சி**

## ஆராய்ச்சிக் கட்டுரையின் சுருக்கமும் *(abstract)*
## ஆராய்ச்சி விரிவுக் கட்டுரையும் அனுப்பும் முறைகள்

1. ஆராய்ச்சிக் கட்டுரை எங்கும் இதுவரை வெளியிடப்படாத முழுமுதல் ஆராய்ச்சிக் கருத்துகள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
2. ஆராய்ச்சியாளர்கள் "ஆராய்ச்சி விரிவுக் கட்டுரையை" அனுப்பும் முன்னர் அதன் சுருக்கத்தினை முதலில் அனுப்ப வேண்டும். இந்தச் சுருக்கம் "மைக்ரோசாப்ட்" சொல் செயலியில் (Microsoft Word) இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் "யுனிகோடு" முறையில் (unicode format) இருத்தல் வேண்டும்.
3. ஆராய்ச்சிச் சுருக்கம் அக்டோபர் 31 2022 ஆம் தேதிக்குள் பின்வரும் மின்னஞ்சல் வழியாக அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சல் முகவரி "academic-committee@icsts11.org". பெறப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைச் சுருக்கங்கள் ஆய்வறிஞர் குழுவினரால் (academic committee) சீராய்வு செய்யப்பட்டு அவை ஏற்புடையதா இல்லையா என்ற முடிவுகள் நவம்பர் 15, 2022 தேதிக்குள் அறிவிக்கப்படும்.
4. ஏற்கப்பட்ட ஆய்வுச் சுருக்கத்தின் ஆசிரியர்கள் தங்களது ஆராய்ச்சி விரிவுக் கட்டுரையை பிப்ரவரி 15, 2023 ஆம் தேதிக்குள் அனுப்புதல் வேண்டும். இந்தக் கட்டுரை "மைக்ரோசாப்ட்" சொல் செயலியில் (Microsoft Word) முப்பது பக்கங்களுக்கு மிகாமல், "யுனிகோடு" முறையில் (unicode format), எழுத்தளவு 12-ஆக இருத்தல் வேண்டும். ஆராய்ச்சிக் கட்டுரைச் சுருக்கம், ஆராய்ச்சி விரிவுக் கட்டுரை ஆகிய இரண்டும் தமிழிலோ ஆங்கிலத்திலோ இருத்தல் வேண்டும்.
5. ஆராய்ச்சியாளர்கள் தங்களது வாழ்க்கைக் குறிப்பினை (biodata/resume), 200 சொற்களுக்கு மிகாமல் ஆராய்ச்சிக் கட்டுரையின் சுருக்கத்தோடு இணைத்து அனுப்புதல் வேண்டும்.
6. ஆய்வரங்கில் படைக்கப்படுகின்ற கட்டுரைகளின் எண்ணிக்கை, ஆய்வாளர் பற்றிய குறிப்புகள் பிப்ரவரி 28, 2023 ஆம் தேதிக்குள் தெரியப்படுத்தப்படும். கட்டுரையாளர் அனுமதி கட்டணம், தங்கும் செலவு, உணவுச் செலவு, மாநாட்டின் போது ஏற்படுகின்ற உள்ளூர்ப் போக்குவரத்து செலவு ஆகியவற்றை விழாக் குழுவினர் ஏற்றுக்கொள்வர்.
7. ஆய்வரங்கில் பங்கேற்கும் ஆராய்ச்சியாளர்கள் தங்களது சொந்த செலவிலோ அல்லது அரசு,கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் முதலியன தரும் பொருள் உதவியாலோ தங்களது பயணச் செலவிற்கான ஏற்பாடுகள் செய்து கொள்வதை வரவேற்கின்றோம். அப்படிப் பொருளுதவி பெற முடியாதவர்களுக்கு மாநாட்டின் அமைப்பாளர்கள் பொருளுதவி பெற முயல்வார்கள். பயணம் பற்றிய மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.
8. ஆராய்ச்சியாளர்கள் தங்களது கடவுச்சீட்டினை (Passport) பிப்ரவரி 28, 2023 ஆம் தேதிக்குள் பெற்று வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் குறித்த நேரத்தில் சிங்கப்பூர் நுழைவுச்சான்று (Visa) பெற உதவியாக இருக்கும்.

9. ஆராய்ச்சியாளர்கள், மாநாட்டின் போது தேவைப்படும் எதிர்பாராது வரக்கூடிய மருத்துவச் செலவிற்குத் தேவைப்படும் விதமாக, தங்களுக்கான மருத்துவக் காப்பீட்டினை (Insurance) முன்னரே வாங்கி வைத்திருக்க வேண்டும்.
10. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மாநாட்டின் இணையத் தளத்தில் வெளியிடப்படும். ஆய்வரங்கில் படைக்கப்படுகின்ற கட்டுரைகள் மட்டும் மாநாட்டு மலரில் இடம் பெறும்

**ஆய்வு மாணவர்களுக்கு**

11. ஆய்வு மாணவர்களை ஊக்குவிக்க, மாநாட்டு அமைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட, முப்பது வயதுக்குக்குறைவான, பத்து ஆய்வு மாணவர்களின் பயணத்திற்கு நிதியுதவி செய்யத்திட்டமிட்டுள்ளார்கள்.

**பெண் ஆய்வு அறிஞர்களுக்கு**

12. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் முதன்மை எழுத்தாளர்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐந்து (5) பெண் அறிஞர்களுக்கான பயணத்திற்கு நிதியுதவி செய்ய ஒரு அமைப்பு முன்வந்துள்ளது.